செ.வெ.எண்: 42 / ஏப்ரல் /2020 நாள்: 15.04.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்று தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

**ஜமால் முகமது கல்லூரியில் தனியாக வைக்கப்பட்டு மருத்துவக் குழுவினரால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வந்தவர்களில் ரத்தமாதிரி பரிசோதனை மேற்கொண்டதில் கொரோனா வைரஸ் நோய் தொற்று இல்லை என 61 நபர்கள் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் – மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

-------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு முன்னெச்சரிக்கையாக மகாத்மா காந்தி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொரோனா வைரஸ் நோய் சிறப்புப் பிரிவு அமைக்கப்பட்டு நோய்தாக்கம் உள்ளவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் சிறப்பான சிகிச்சையினால் ஈரோட்டைச் சேர்ந்த 24 வயது இளைஞர் கொரோனா வைரஸ் நோய் தொற்றிலிருந்து குணமடைந்து வீட்டிற்கு 10.04.2020 அன்று அனுப்பப்பட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் நோய் தொற்று தொடர்பாக Institutional Quarantine ஜமால் முகமது கல்லூரியில் வைக்கப்பட்டு மருத்துவக் குழுவினரால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வந்தனர். தற்பொழுது ரத்தமாதிரி பரிசோதனையில் கொரோனா வைரஸ் நோய் தொற்று இல்லை என 61 நபர்களுக்கு பரிசோதனை அறிக்கை வரப்பெற்றுள்ளது. இதனால் இன்று (15.4.2020) 61 நபர்களையும் Institutional Quarantineல் இருந்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். வீட்டில் இவர்கள் 14 நாட்கள் தனிமையில் இருக்க வேண்டும் என்று மருத்துவக்குழுவினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**